# இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனையிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள் விளக்கங்கள் என்பவற்றிக்கமையவும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது. எனது இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் நிதிசார் நிலைமை அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோன்றும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததென என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2010/2011 ஆம் கல்வி ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளூர் ஆளுகை தொடர்பான உயர் டிப்ளோமா பாட நெறியில் பங்கு பற்றியிருந்த உத்தியோகத்தர்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 480,000 கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் ரூபா 58,487 கூட்டுத் தொகையான 3 கணக்கு விடயங்களின் மீதிகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 54,738 கூட்டுத்தொகையான 6 கணக்கு விடயங்களின் மீதிகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் நிருவாகக் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 15,111,237 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த காணியில் 06 மாதங்களுக்குள் உத்தேச நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாததன் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 11,070,000 தொகை மீளச்

| | | |
|---|---|---|
| | | உள்ளூராட்சி விடயங்களில் ஈடுபட்ட ஒருவர் அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டியிருந்த போதும் 85,86 மற்றும் 87 ஆவது கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டங்களுக்காக வட கொழும்பு போதன வைத்திய சாலையின் (றாகம) வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) | நி.பி 1645 மற்றும் நி.பி 1646 | மீளாய்வாண்டின் 4 வாகனங்களுக்கு உரித்தான 8 மாதங்களுக்கும் 3 வாகனங்கள் தொடர்பாக வருடத்திற்கும் உரிய ஒட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் வாகனங்கள் தொடர்பான பொது 267 படிவத்தின் பிரகாரம் சம்பவத் திரட்டுப் புத்தகமும் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 1647 (உ) மற்றும் நி.பி ii ஆம் பாகத்தின் (iv) ஆம் உப பிரிவு | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 1653 | தொடர்புடைய பிரமாணங்களுக்கு இணங்க 02 வாகனங்களின் மைலோமீற்றர் மாணி செயற்பாடற்றிருந்த நிலையிலும் வாகனம் ஓடப்பட்டிருந்தது. |
| (iv) | நி.பி 396 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத செல்லுபடிக்காலம் கடந்திருந்த ரூபா 21,500 கூட்டுத் தொகையான 03 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.பி 757 (2) | வருட இறுதியின் போது சொத்துக்கள் பௌதிகப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை |

| | | |
|---|---|---|
| | | காணப்படாத சந்தர்ப்பங்களில் வீடுகளுக்கு கொண்டு செல்வதற்கு வாடகை வாகனங்கள் ஈடுபடுத்தியமைக்காக ரூபா 20,781 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்று நிரூபம் | கணணி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக தொடர்புடைய சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பேணப்பட வேண்டிய நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பீஎப்/பீஈ/5 ஆம் இலக்க பொது நிதிக்சுற்று நிரூபம் | தொடர்புடைய சுற்றுநிரூபத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த நிதியங்களிலிருந்து சகல உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 10,000 படி ரூபா 379,166 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2000 மார்ச் 27 ஆந் திகதிய எம்எப் 6/1/3/200 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் சுற்று நிரூபம் | சுற்று நிரூபத்தின் பிரகாரம் அரச கடமைகளிற்காக வெளிநாட்டிற்குச் செல்கின்ற உத்தியோகத்தர்களின் பிரயாண அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக ஒருவருக்கு ரூபா 2,500 கட்டணம் ஒன்று செலுத்தக் கூடியதாக இருந்த போதும் அதற்காக ரூபா 5,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டீஎம்எஸ்/எஸ்ஏஎல்/எஸ்ஜஎல்ஜீ ஆம் இலக்கம் மற்றும் 2000 யூலை 12 ஆந் திகதிய இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்திற்கான மேலதிக பதவியினர் மற்றும் சம்பளப் படிநிலைகளை அங்கீகரிப்பதற்கான கடிதம் | தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் ஆலோசனை (சட்ட செயற்பாடுகள் தொடர்பான) பதவிக்காக சட்டத்துறையில் 10 வருட அனுபவமொன்று இருக்க வேண்டிய போதிலும் உரிய உத்தியோகத்தரின் அனுபவம் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

வருமானங்கள் ரூபா 2,737,457 தொகையினால் குறைவடைந்தமை செயற்பாட்டு வருமானங்கள் குறைவதற்கு தாக்கமளித்திருந்தன.

(இ) நிருவாகம் மற்றும் நிறுவன செலவினம், மனிதவள அபிவிருத்திச் செலவினம் மற்றும் ஆலோசனைச் சேவை செலவுகள் முறையே ரூபா 1,213,595 இனாலும் ரூபா 1,394,218 இனாலும் மற்றும் ரூபா 3,479,225 இனாலும் குறைவடைந்தமை செயற்பாட்டுச் செலவினம் குறைவடைந்தமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றுகை

நிறுவகத்தின் முதன்மை நோக்கமான மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் அவர்களது கடைமைகளை மிகவும் வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றக் கூடியவாறு செயலமர்வுகளையும் பயிற்சிப் பாடநெறிகளையும் நடத்தும் செயற்பாட்டிற்காக மீளாய்வாண்டில் ரூபா 20,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நேரொத்ததாக செய்யப்பட்டிருந்த செயலாற்றல் நடவடிக்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விபரங்கள் போதியளவானதாக இன்மையினால் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அடைவுகள் தொடர்பான அவதானிப்புக்களைச் செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| பிரிவு | மதிப்பிடப்பட்டவை | | மதிப்பீட்டு ஏற்பாடு | உள்ளவாறான செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை | உண்மையான செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை | | | | |
| | | | ரூபா | | | ரூபா |
| மனித வளம் | 16 | காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2,100,000 | 7 | 1,788 | 1,789,146 |
| பொறியியல் | 29 | 352 | 2,100,000 | 9 | 320 | 1,005,867 |
| பொது முகாமைத்துவம் | 30 | காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2,100,000 | 16 | 848 | 1,516,663 |

**2.2.4 குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்**

ரூபா 654,000 கூட்டுப் பெறுமதியான 05 விடயங்களுக்குரிய சொத்துக்கள் காரியாலயப் பகுதியில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**2.2.5 இழப்புக்களும் நட்டங்களும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 யூலை தொடக்கம் திசெம்பர் வரையான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய ஆறு மாத அறிக்கை / பணம் தாமதமாகியமையினால் ரூபா 13,157 தொகை மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காணியொன்றினைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 9 மில்லியனில் ரூபா 3 மில்லியன் நிலையான வைப்புக்கள் 2010 மார்ச் 31 ஆந் திகதியில் மாற்றப்பட்டு 2010 நவம்பர் 01 ஆந் திகதி வரையும் நடைமுறைக் கணக்கில் வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்கவில்லை. அப் பணங்கள் குறுகிய காலத்திற்கேனும் முதலீடு செய்யப்படுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர் ஒருவருக்கு 2010 செப்தெம்பர் மாதத்திற்காக 2 சந்தர்ப்பங்களில் சம்பளம் செலுத்தியமையினால் ரூபா 19,180 தொகையான மேலதிகக் கொடுப்பனவொன்று அவதானிக்கப்பட்டது.

**2.2.6 பதவியணியினர் முகாமைத்துவம்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையைப் பேணுவதற்கு முகாமை தவறியிருந்தது.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | மிகை / வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலை | 10 | 11 | 01 |